## 3. நிழற்பட நாவல்கள்

6 - 9 ஆந் தரம் | 2 - 3 மணித்தியாலம்

கருவிகள்:
தாள், புகைப்படக்கருவி,
அல்லது அலைபேசிப் புகைப்படக்கருவி

"நிழற்பட நாவல்கள" என்பன பதின்மவயதினர் இதழ்களில் நன்கு அறியப்பட்ட கூறுகளாகும். அவை படங்களையும் பேச்சுக் குமிழிகளையும் கொண்ட கதையை உடையன. (ஏனைய எழுத்துருக் கூறுகளை சேர்த்துக்கொள்ளலாம், அவை, ஒரு படத்துக்குக் கீழேயுள்ள கீற்றில் "ஒரு கிழமைக்குப் பின்னர்…." என்னும் கூற்று அமைந்திருத்தல். நகைச்சுவையை உருவாக்க, மாணவர்கள் முதலில் ஒரு கதை வரிசையை முடிவுசெய்ய வேண்டும். எழுத்துப்படிவத்தினை எழுதுவதற்கு, அவர்கள் எழுத்துப்படிவத்தினை வேறுபட்ட காட்சிகளாகப் பிரிக்கவேண்டும். ஓர் அலைபேசி அல்லது மின்புகைப்படக்கருவி ஊடாக படங்களைப் பிடித்து (இது ஒரு வீட்டு வேலையாக) அச்சிடலாம். நல்ல கணினி நாட்டம் கொண்ட மாணவர்கள் முழுக் கதையையும் மின்னியற் படமாகவும் உருவாக்கிவிடுவர்.

---

## 4. சிறு நூல்கள்

2 - 5 ஆந் தரம் | 30 - 60 மணித்துளிகள்

கருவிகள்:
சுருக்கங்கள்
(வலம்: பார்க்கவும்)

சிறு நூல்கள் சிறியவை, தாங்களாக உருவாக்கிய குறுநூல்கள், ஒரு தலைப்புப் பக்கம் மற்றும் 6 – 7 பக்க எழுத்துரு கொண்டவை. எழுத்துருவுக்கு எண்ணக்கருக்கள் தேவை, அத்துடன் ஒரு தாள் துண்டு (A4 அல்லது A3) மற்றும் எப்படி அத்தாளை மடிக்கவேண்டும், வெட்டவேண்டும் என்பதற்கான அறிவுறுத்தல்களுடன்.
http://www.minibooks.ch/ என்பதில் அறிவுறுத்தல்களைப் பார்க்கலாம். அல்லது ஆசிரியர் தரவிறக்கம் செய்து அவற்றை அச்சிட்டு வகுப்புக்குக் கொடுக்கலாம், அல்லது மாணவர்கள் கிடைக்குமாயின், கணினியிலேயே தங்கள் சிறுநூல்களை உருவாக்கலாம். குறுநூல்கள் கவர்ச்சியானவையாகவும், பட விளக்கமுடையனவாகவும் அமையும்.

---

## 5. வழியைப் பின்பற்றவும்

3 - 9 ஆந் தரம்

கருவிகள்:
நிலப்புகைப்படங்கள்
(செய்தித் தாள்கள், இதழ்களிலிருந்து தபால் அட்டைகள் அல்லது படங்கள்)

மாணவர்கள் ஒரு படத்தினை அல்லது இயற்கை நிலக்காட்சியின் (எ.கா. அவர்கள் தாயகத்திலிருந்து) புகைப்படத்தினைப் பெறுவர். அதனை ஒரு தாள் துண்டில் (A4 அல்லது A3, கிடைநிலை வடிவம்). வகுப்பிலோ அல்லது வீட்டு ஒப்படையாகவோ, படத்தின் தொடர்ச்சியாக புகைப்படத்தின் இட, வலப் பக்கங்களில் கீறுவர் அல்லது நிறந்தீட்டுவர். விரிவாக்கிய படத்தின் கீழே, அவர்கள் இயற்கை நிலத்தூடாகச் செல்லும் போக்கினை விவரித்து ஓர் எழுத்துரு எழுதுவர் (அதாவது, அவர்கள் என்ன காணுகின்றனர், உணர்கின்றனர், முகர்கின்றனர் என்று பட்டறிகின்றனர்.)